ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2002* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *41/2002*) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஓ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002* ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *45/2002*) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2002* ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *45/2002*) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு சட்டமுன்வடிவுகளும் அவருடையதுதான். இவற்றிலே ஏதாவது பேச வேண்டுமென்றால் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மூன்று Bills இருக்கின்றன. மூன்றையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை முதலில் எடுத்துக் கொள்ளலாம். இதிலே ஏதாவது பேச வேண்டுமென்றால் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, சரி.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு *2* திருத்தம் இல்லை.

பிரிவு *2* சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 29-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

பிற்பகல் 6-15

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.